உதவியாளராகப் பணிவாய்ப்பு கோரி, 09-07-2003 அன்று முதன் முதலில் விண்ணப்பித்துள்ளார்.

பார்வை 1 ல் காண் செயல்முறைகளுக்கிணங்க, இவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்று கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 06-06-2017 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 4 ல் கண்ட அரசு கடிதத்தில் அறிவுறுத்தியதற்கிணங்க, உரிய காலக்கெடுவிற்குள் பணிவரன்முறை செய்ய கோரும் கருத்துருக்கள் அனுப்பப்பாததற்கான விளக்கம் கோரப்பட்டதன் பேரில் பார்வை 7 ல் வரப்பெற்ற தனியரின் தன்னிலை விளக்கத்தில், கருணை அடிப்படையில் நியமனம் பெற்றவருக்கு அரசால் பணிவரன்முறை ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும் என்பதால், கிருஷ்ணகிரி மாவட்டக்கல்வி அலுவலரால் பார்வை 2 ன் வாயிலாக வழங்கப்பட்ட பணிவரன்முறை ஆணை பார்வை 3 ன் வாயிலாக இரத்து செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டது. இதனால் பணிவரன்முறை கருத்துருக்கள் அனுப்புவதில் காலத்தாமதமானது எனத் தெரிவித்துள்ளார்.

எனவே, பார்வை 5 ல் கண்ட அரசாணைக்கிணங்க, தனியரின் தன்னிலை விளக்கம், தனியர் சமர்பித்த அசல் ஆவணங்கள் மற்றும் பணிவாய்ப்பு கோரி சமர்பித்த கருத்துருக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்கண்டவாறு இவரின் பெயருக்கு எதிரே கலம் 4 ல் குறிப்பிட்டுள்ள நாளில் தனியரது இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

| வ எண் | பெயர், பதவி மற்றும் பணிப்புரியும் அலுவலகம் / பள்ளி | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருமதி.ஆ.திரிபுரசுந்தரி, இளநிலை உதவியாளர் அரசு மேல்நிலைப்பள்ளி, மிட்டப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம். | 06-06-2017 முற்பகல் | 06-06-2017 முற்பகல் |

மேலும், இப்பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார். தகுதிகாண் பருவக் காலத்திற்குள் பவானி சாகர்

Created By: Sign Doc

அடிப்படைப் பயிற்சினையும், தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வினையும் கண்டிப்பாக தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இப்பணிவரன்முறை ஆணை குறித்து சம்மந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சம்மந்தப்பட்ட அலுவலர்/ தலைமையாசிரியருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு:பணிப்பதிவேடு.

முதன்மைக் கல்வி அலுவலர்

கிருஷ்ணகிரி

17/11/23

பெறுதல்

திருமதி.ஆ.திரிபுரசுந்தரி,

இளநிலை உதவியாளர்

அரசு மேல்நிலைப்பள்ளி, மிட்டப்பள்ளி,

கிருஷ்ணகிரி மாவட்டம். (உரிய வழியாக)

நகல்:தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, மிட்டப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

நகல்:மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை), கிருஷ்ணகிரி.

Created By: Sign Doc

**கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர்: திருமதி.கா.பெ.மகேஸ்வரி.எம்.ஏ.பி.எட்.,**

**ந.க எண் 2473/ஆ1/2020** **நாள்: 17/11/2023.**

பொருள் தமிழ்நாடு அமைச்சுப்பணி - பணிவரன்முறை - கிருஷ்ணகிரி மாவட்டம், மிட்டப்பள்ளி அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி.ஆ.திரிபுரசுந்தரி என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல்- தொடர்பாக.

பார்வை 1.கிருஷ்ணகிரி மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் நக எண் 1312/2012/அ1 நாள்:05.06.2017

2.கிருஷ்ணகிரி,மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் நி.மு எண் 3572/2017/அ1 நாள்:24.11.2017

3.கிருஷ்ணகிரி மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க எண் 4059/2017/அ1 நாள்:23.05.2018

4. அரசு கடித எண் 11968/பக.4(1)/2020 நாள்:14.08.2020.

5. அரசாணை நிலை எண் 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை (க்யூ1) நாள்:26.02.2021.

6.கிருஷ்ணகிரி மாவட்டக்கல்வி அலுவலரின் கடித ந.க எண் 1275/2020/அ1 நாள்:11.07.2020

7.ஊத்தங்கரை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளித்தலைமையாசிரியரின் கடித ந.க எண் 80/2020 நாள்: 01.12.2020.

8.அரசாணை எண்.151, பள்ளிக்கல்வி (பக1(1))த் துறை நாள்.09.09.2022.

==@@@@@==

**ஆணை:**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்று 06-06-2017 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திருமதி.ஆ.திரிபுரசுந்தரி என்பார் தனது இளநிலை உதவியாளர் பதவியில் பணியினை வரன்முறை செய்திட கோரி பார்வை 6 ல் வரப்பெற்ற கருத்துருக்களை பார்வை 8 ல் காண் அரசாணையின் படி முதன்மைக்கல்வி அலுவலருக்கு நியமன அலுவலர் என்ற நிலையில் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் பார்வை 5 ல் கண்ட அரசாணைக்குட்பட்டு நன்கு பரிசீலிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஒன்றியம் சாப்பமுட்லு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றி 22-08-2000 அன்று பணிக்காலத்தில் மரணமடைந்த திரு.கே.ஆறுமுகம் என்பாரின் வாரிசுதாரர் திருமதி.ஆ.திரிபுரசுந்தரி என்பார், தனக்கு கருணை அடிப்படையில் இளநிலை

*Created By: Sign Doc*